1970 செப்டம்பர் 2]

இடங்களை அதற்காக முதலில் தேர்ந்தெடுத்தார்கள். அந்த இரண்டு இடங்களுக்கும் ஆட்சேபனைகள் ஏராளமாக இருந்தன. இறுதியாக அரசாங்கத்திற்கு இருக்கிற இடத்திலேயே கட்டலாம் என்று உயர் நீதிமன்றம் ஒப்புக்கொண்டது. இனிமேல் கட்டடம் கட்டும் முயற்சியில் ஈடுபடும். பணம் வர வர இதுபோன்ற கட்டடங்களுக்கு செலவழிக்க படிப்படியாக திட்டமிடப்படும்.

வெண்கலச் சிலைகள் ஏற்றுமதி

* 198 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் தயாராகும் வெண்கல சிலைகளை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தமிழக அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வெண்கலச் சிலைகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறோம். மேலும் ஏற்றுமதியை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

திரு. வை. சுவாமிநாதன் : அம்மாதிரி எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தெந்த நாடுகளுக்கு எவ்வளவு எவ்வளவு ஏற்றுமதி ஆகிறது என்ற விவரம் இல்லை. ஒவ்வொரு நாட்டிலும் இவைகளை ஆங்காங்கு நடக்கிற கண்காட்சிகளில் வைக்கிறோம். ஹாங்காங்கில் வைத்திருக்கிறோம், ஸிட்னி ஃபேரில் வைத்திருக்கிறோம், ரோமில் வைத்திருக்கிறோம், வாஷிங்டனில் வைத்திருக்கிறோம், ஜி. டி. ஆர்-ல் வைத்திருக்கிறோம், ஃப்ராங்ஃபர்ட்டில் வைத்திருக்கிறோம். இப்போது நம் சிறு தொழில்கள் வாரியம் இதுபோன்ற ஏராளமான சிலைகளை சப்ளை செய்யவேண்டும் என்று ஒரு உத்தரவு வந்திருக்கிறது நம் எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கார்ப்பரேஷனிலிருந்து. எந்தெந்த நாடுகளுக்கு எவ்வளவு எவ்வளவு என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister what kind of statues are finding market in the outside world ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிறைய இருக்கின்றன. ஆக்ஸிடைஸ்ட் நடராஜா, ப்ரான்ஸ் நடராஜா, பார்வதி சிலை, மீனாட்சி சிலை, வினாயகர் சிலை, டான்ஸிங் ஃபிகேர்ஸ். வினாயகர் சிலைக்குத்தான் மிகவும் குறைந்த விலை போட்டிருக்கிறது, 75 ருபாய்தான் போட்டிருக்கிறது. சிவகாமி சிலை, கண்ணுடியம்மன் சிலை, விளக்குநாச்சியார் சிலை, நின்று கொண்டிருக்கும் வினாயகர், ஸ்டான்டிங் வினாயகர், சிவன் சிலை, அர்த்தநாரீஸ்வரர் சிலை, அபீயாசம்மன் சிலை, நெம்மியம்மன் சிலை, நாகையம்மன் சிலை போன்றவற்றை கேட்கிறார்கள். புதிதாக ஒரு கொள்கையை எடுத்து வெளிநாடுகளில் நடைபெறுகிற அத்தனை கண்காட்சிகளிலும் நம் சிறு தொழில்கள் வாரியம் சார்பில் பங்கேற்று இந்தச் சிலைகளை வைக்கிறோம். இவற்றிற்கு மிகுந்த

கிராக்கி இருப்பதால் அண்மையில் 400 சிலைகளை அனுப்பவேண்டு மென்று ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சிலைகளைப் பொறுத்தவரையில் வெளிநாடுகளில் அதிகம் கிராக்கி இருப்பது போல் தோன்றுகிறது.

தமிழ்நாட்டு அரசுத் திட்டங்களுக்கு இங்கிலாந்து உதவி.

* 199 வினா—திரு. டி. மார்டின் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1970 ஜனவரித் திங்கள், தமிழ்நாட்டுக்கு வந்துள்ள இங்கிலாந்து வெளிநாட்டு அபிவிருத்தி இலாகா பெண் மந்திரி திருமதி ஜுடித் ஹார்ட் அவர்களிடம் தமிழ்நாட்டு தொழில் அமைச்சர் பேச்சு வார்த்தை நடத்தினாரா ?

(இ) ஆம் எனில், அப்போது தமிழக அரசின் ஒன்றிரண்டு திட்டங்களுக்கு இங்கிலாந்தின் உதவி வேண்டும் என்று கேட்கப் பட்டதா ?

(உ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) &(உ) இல்லை.

THIRU T. MARTIN : Sometime back it was published in newspapers that the Hon. Minister for Industries had discussed with the Hon. Minister from England regarding some schemes for Tamil Nadu. May I know from the Hon. Minister whether it was true?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி அந்த அமைச்சரி டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவி கேட்கப்பட்டதா என்ப தாகும். அப்படி மாநில அரசு நேரடியாகக் கேட்கக் கூடாது என்பது மரபு. ஆகவே "இல்லை" என்று சொன்னேன். இப்படி அமைச்சர்கள் வரும்போது அவரவர்கள் நாட்டில் உள்ளவர்கள் இந்த நாட்டில் நடத்துகிற தொழில்களுக்கு, அவர்கள் அரசாங்கம் நம் அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு நடத்துகிற தொழில்கள் பற்றி நம்மோடு விவாதிக்கிறார்கள். அதிலுள்ள சிக்கல்கள் பற்றிச் சொல்கிறார்கள். புதிய தொழில்கள் வளரவேண்டுமென்றால் அதற்கு என்னென்ன உதவிகளை நம் அரசாங்கத்திலிருந்து எதிர்பார்க்க முடியும் என்ற விவரங்களை எல்லாம் சேகரிக்கிறார்கள். சட்டபூர்வ மாக நாம் நெகோஷியேஷன்ஸ் என்ற முறையில் பேசுவதில்லை. விவரங்களைச் சொல்கிறோம்.

உதாரணமாக அவர்கள் வந்தபோது தூத்துக்குடி உரத் தொழிற் சாலைக்கு என்னென்ன நமக்குத் தேவைப்படுகின்றன, என்னென்ன கிரேட் பிரிட்டனிலிருந்து கிடைக்கவேண்டும் என்பதைப் பற்றி யெல்லாம் எடுத்துக் கூறினோம். அதேபோல் ஐ.ஸி. என்ற பிரிட்டிஷ் கம்பெனி இருக்கிறது. நாம் பெட்ரோல் கெமிக்கல் காம்ப்ளக்ஸ் ஒன்று மணலியில் ஏற்படுத்தலாம் என்ற ஒரு செயற்குறிப்பு